## சேலத்தில் டி.எம்.செல்வகணபதியை ஆதரித்து – அதிகாலையில் கழகத் தலைவர் –

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வணிகர்கள் – பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.03.2024) சேலம் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு ஆதரவாக அக்ரஹாரம் பிரதான மார்க்கெட் பகுதியில் வாக்குச் சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்த தேனீர் கடையில் தேனீர் அருந்தினார். உடன் கழக மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான இரா.ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர் எஸ் ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உள்ளனர்.

### பெரம்பலூர் நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளர்

## அருண் நேரு கிராமம், கிராமமாகச் சென்று தீவிர வாக்குச் சேகரிப்பு!

### அமைச்சர் கே.என்.நேரு தீவிர பிரச்சாரம்!

துறையூர், மார்ச் 31-

பெரம்பலூர் நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளர் அருண் நேரு காலை திருச்சி மாவட்டம் துறையூர் அருகே உள்ள பெருமாள் மலை அடிவாரப் பகுதியில் இருந்து வாக்குச் சேகரிப்பை தொடங்கினார்.

வேட்பாளர் அருண்நேருவை ஆதரித்து கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்பொழுது அவர் பேசியதாவது:-

தமிழக முதல்வராக ஸ்டாலின் பொறுப்பு ஏற்ற தினத்திலிருந்து, துறையூர் தொகுதிக்கு ஏராளமான நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. துறையூர் நகரப்பகுதியின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு துறையூர் ஆத்தூர் புறவழிச்சாலை திட்டம் 2 சுமார் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் துறையூர் பகுதிக்கு என சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனி கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் தி.மு.க. வேட்பாளர் வெற்றி பெற்றவுடன் அடிவாரம் மற்றும் நாகலாபுரம் பகுதியில் தொழில் செய்து வரும் சிற்ப கலைஞர்களுக்கென தனி இடம் ஒதுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

துறையூர் ஒன்றியத்தில் உள்ள படித்த இளைஞர் மற்றும் பெண்கள் உரிய வேலை வாய்ப்பினை பெற தொகுதியின் மையப்பகுதியில் சிப்காட் மூலம் தொழிற்சாலைகள் அமைத்து தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும். துறையூர் தொகுதியில் உள்ள பள்ளி மாணவ மாணவியர்கள் கலை மற்றும் அறிவியல் துறை படிப்புகளை படிப்பதற்கு தற்சமயம் திருச்சி, முசிறி, பெரம்பலூரில் உள்ள கல்லூரிக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதனை மாற்றும் பொருட்டு துறையூர் பகுதியிலேயே புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் ஒன்றிய அரசு மூலம் தமிழ்நாட்டிற்கு தேவையான உரிய திட்டங்களைப் கேட்டு பெற, தமிழக முதலமைச்சர் ஸ்டாலினின் கரத்தை வலுப்படுத்தும் வகையில், பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக போட்டியிடும் அருண் நேருவை, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து வேட்பாளர் அருண்நேரு கிழக்குவாடி, நாகலாபுறம், குன்னுபட்டி கொட்டம், கீழ குன்னுபட்டி, மேல குன்னுபட்டி, புளியம்பட்டி, நடுவனூர், முத்தியம்பாளையம், நல்லியம்பாளையம், மேட்டு சொரத்தூர், சொரத்தூர், கீரம்பூர், கோம்பை புதூர், உள்ளிட்ட பகுதிகளில் வாக்குகள் சேகரித்தார். அவருக்கு ஏராளமான ஆண்களும் பெண்களும் திரண்டு உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

பிரசாரத்தின்போது எம்.எல்.ஏ.க்கள் காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், திருச்சி வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் கலை, நகராட்சி தலைவர் செல்வராணி மலர்மன்னன், ஒன்றிய குழு பெருந்தலைவர் சரண்யா மோகன் தாஸ், நகர செயலாளர் மெடிக்கல் முரளி,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, சரவணன், வீரபத்திரன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சுரேஷ்குமார்,நகர துணை செயலாளர் இளங்கோ, பிரபு, கஸ்டம்ஸ் மகாலிங்கம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் கிட்டப்பா, கார்த்திக் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் உள்ளிட்ட ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அருண்நேருவிற்கு குளித்தலை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணராயபுரம் ஒன்றியம் கொசூர் பகுதியில் அமைச்சர் கே.என்.நேரு பொதுமக்களிடையே வாக்குகளை சேகரித்தார். கரூர் மாவட்ட பொறுப்பாளர், எம்.எம்.அப்துல்லா எம்.பி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா. மாணிக்கம், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### கடலூர் நாடாளுமன்ற காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் எம்.கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து

## குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

கடலூர், மார்ச் 31 -

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கடலூர் நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் டாக்டர் எம். கே.விஷ்ணுபிரசாத்தை ஆதரித்து கடலூர் மாவட்டம் கடலூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (31.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் குறிஞ்சிப்பாடி வடலூர் சாலை, ரோட்டு ஆண் டிக்குப்பம் பைபாஸ் சாலை அருகில், முத்தமிழறிஞர் கலைஞர் திடலில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம்,

கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி, ஆம்ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி மற்றும் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அனைத்து அணியின் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் மக்கள் நீதி மையம் கட்சியின் நிறுவனத் தலைவர் கமல்ஹாசன் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷை ஆதரித்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார். பரப்புரையில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.